## பெருநகர சென்னை மாநகராட்சி
### செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.19** **நாள்: 09.02.2018**

**வேலங்காடு எரிவாயு மயானபூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால், வில்லிவாக்கம், அரும்பாக்கம் மற்றும் ஓட்டேரி எரிவாயு மயானபூமியை பயன்படுத்தி கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, அண்ணாநகர் மண்டலம், வார்டு–101ல் உள்ள வேலங்காடு எரிவாயு மயானபூமியில், எரிவாயு தகனமேடையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இருப்பதால், அதனை சீர்செய்யும் பொருட்டு 11.02.2018 முதல் 25.02.2018 வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட உள்ளது.

மேலும், பராமரிப்பு பணி நடைபெறும் நாட்களில் அருகில் உள்ள வில்லிவாக்கம், அரும்பாக்கம் மற்றும் ஓட்டேரி எரிவாயு மயானபூமியை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**